




# தாயுமானவரும் பட்டினத்தாரும்

இந்த உலகம் அனைத்தும் பொய் என்று உணர்ந்து, பட்டினத்தார் துறவு மேற்கொண்டதுபோல புறப்பொருளை எனையோர் துறத்தல் மிகவும் அரிது. அகத்துறவும் அப்படியே, என்று பட்டடினத்தாரைப் புகழ்கிறார் தாயுமானவர்.

"பார் அனைத்தும் பொய் எனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல்

ஆரும் துறக்கை அரிது அதிது. - நேரே

மனத்துறவும் அப்படியே. மாணா! இவற்றில்

உனக்கு இசைந்தவாறு ஒன்றே ஓர். (பா.516 உடல்பொய்யுறவு 57)

ஞாலத்தில் தோன்றிய உயிர்கள் நல்லநிலை பெற்று உய்வடைந்திட பல சான்றாளர்கள், ஞானிகள், மகான்கள் போன்றோர் உதித்து நம்மை நல்நெறி நோக்கோடு தெய்வீக வாழ்க்கையை வாழ அருளிச் சென்றுள்ளனர்.

அந்த வழியில் பட்டினத்தாரும் தாயுமானவரும் இப்புவியில் தோன்றி நம்மை-நாம் உணர்ந்திடவும் இன்ப வாழ்வினை எய்தவும் உண்மை விளம்பிகளாய் வழிகாட்டி நிற்கிறார்கள்.

- பட்டினத்தார் கி.பி. 14 ஆம் நூற்றாண்டிலும் தாயுமானவர் கி.பி. 18 ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்கள்.
- பட்டினத்தார் காவிரிப்பூம்பட்டினத்தில் தோன்றி சென்னைத் திருவொற்றியூரில் நிறைவு பெற்றவர். தாயுமானவர் திருச்சியில் அவதரித்து இராமநாதபுரத்தில் நிறைவு பெற்றவர்.
- பட்டினத்தார் செல்வந்தர் குடியிலே பிறந்து துறவியானவர். பேய்க்கரும்பும் இனிக்கக் கண்ட பேரருளாளர். தாயுமானவர் அமைச்சரின் மகானாக பிறந்து அமைச்சராக பணி புரிந்து துறவியானவர்.
- இவை பட்டினத்தார் பாடல்கள் என அழைக்கப்படுகின்றன. தாயுமானவரின் 1452 பாடல்கள் 56 பிரிவுகளில் தொகுக்கப்பட்டு, தாயுமானவர் பாடல்கள் என பெயர் பெற்றுள்ளன.

- பட்டினத்தாரைப் பற்றியும் தாயுமானவரைப் பற்றியும் நமது நாட்டு மக்கள் அனைவரும் அறிவார்கள்.
- இருவருடைய பாடல்களைப் பலரும் படிக்கின்றனர். அவர்கள் சொல்லியருக்கும் வேதாந்தக் கருத்துக்களைப் பலரும் போற்றுகின்றனர்.
- இருவருடைய பாடல்களைப் உள்ளம் உருகிப் பாடுவதைக் கேட்கின்றோம்.
- இருவருடைய பாடல்களும் மனப்பாடம் செய்வது எளிது.
- இருவருடைய பாடல்களும் படிப்பதற்கும், பாடுவதற்கும் இனிமையானவை.
- இருவருடைய பாடல்களும் பலருக்கும் பொருள் விளங்கும் எளிய நடையில் இயன்றவை.
- தமிழ் மொழி, மக்களுக்குப் புரியும் வகையிலும் மக்களோடு இணைந்து எப்படி வளாந்து வந்திருக்கின்றது என்பதற்கு இவ்விருவர் பாடல்களையும் உதாரணமாகக் கொள்ளலாம்.
- மொழியின் வளர்ச்சியில் மட்டும் அன்று.. கருத்திலும் இவ்விருவர் பாடல்களிலும் வளர்ச்சியைக் காணலாம்.
- பட்டினத்தார், தாயுமானவர் இருவர் பாடல்களிலும் சமரச சன்மார்க்க போதனைகள் பல நிறைந்திருக்கின்றன.
- இருவர் பாடல்களும், அவர்களைச் சிவனடியார்கள் - சிவபக்தர்கள் என்று எண்ணும்படியே அமைந்திருந்தாலும், அவர்கள் பாடல்களிலே மத வெறுப்பைக் காண முடியாது.
- இருவரும் எந்தத் தெய்வத்தையும் இகழந்து பேசியதில்லை. எந்த மதங்களையும் கண்டித்துப் பாடவில்லை. யாரிடத்திலும் அவர்கள் வெறுப்புக் காட்டவில்லை.
- அன்பு, அருள், அறிவு, இன்பம் , ஒளி இவைகள் தெய்வ வடிவம் என்று இவர்கள் காட்டும் தத்துவங்கள் அனைவருக்கும் பொதுவானது.
- பட்டினத்தார், தாயுமானவர் இருவரும் வெறும் தத்துவ ஞானிகள் மட்டும் அல்லர். உலக அனுபவம் நிறைந்தவர்கள். இதனை அவர்கள் பாடல்களிலே காண முடிகின்றது.
- உலகில் நடைபெறும் வஞ்சனை, சூதுகளையெல்லாம எடுத்துக் காடடிப் பாடியிருக்கின்றனர். உலகில் உள்ள மக்களின் பலதிறப்பட்ட பண்புகளையெல்லாம் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். மக்கள் அனைவரும், ஒன்றுபட்டுச்

சமாதானமாக வாழ்வதற்கு இவர்களின் பாடல்கள் வழிகாட்டுகின்றன.

- மக்களுக்கு அறிவுரையும், சன்மார்கத்தையும் போதிக்கும் பட்டினத்தார் பாடல்களும், தாயுமானவர் பாடல்களும், தமிழ் மக்கள் அனைவராலும் போற்றப்படுகின்றன.
- தாயுமானவர் பாடல்களிலே சமரச எண்ணம் மேலோங்கி நிற்கும். யாரிடமும் வெறுப்புக் காட்டியதில்லை. தன்னைத்தானே இரங்கும் எளிமை படைத்தவர்.
- இருவருடைய பாடல்களிலும் தத்துவக் கருத்துகள் தளர்நடையிடும். உலக ஞானம நிறைந்தவர்கள். அன்றாடம் வாழ்க்கையில் நடைபெறும வஞ்சம், சூதுவாதுகளையெல்லாம பாடியிருக்கின்றார்கள்.
- மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழும் உணர்வை ஊட்டும் கருத்துகளையும் வாழ்க்கைத் தத்துவங்களையும் இவர்களுடைய பாடல்கள் விளக்குகின்றன.

## ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு

கடவுள் ஒருவரே அவர் எங்கும் உள்ளவர் எல்லாம் வல்லவர் என்னும் கருத்தைப் பட்டினத்தார், தம் நெஞ்சுக்குக் கூறுவதுபோல் அமைந்துள்ள பாடல் ஒன்றில் சொல்லுகிறார்.

"ஒன்றறென்றிரு தெய்வம்

உண்டென்றிரு!"

கடவுள் பலராகவிருத்தல் முடியாது. பல பொருள்களுள் ஒன்று சிறப்புடையதாயிருக்கும்.

உலகத்தை ஒழுங்காகப் படைப்பதற்கும் காப்பதற்கும் அழிப்பதற்கும் ஒர தலைவனே இருத்தல் வேண்டும்.

பலர் இருப்பின், அவருள் வேறுபாடு விளைந்து நடைபெறும் தொழில்களும் முரண்படும்.

எவ்வகையான வேறுபாடும் இலலையெனின் பன்மைக் கருத்திற்கு இடமில்லை. எனவே அறிவுடைய பரம்பொருள் ஒன்றே என்பது தெளியப்படும்.

பரம்பொருள் ஒன்றே என்பதை தாயுமானவர் அழுத்தம் திருத்தமாக தனது பாடல்களில் பல இடங்களில் பதிவு செய்துள்ளார்.

"எண்தருநல்ல அகிலாண்ட கோடியைத்தன் அருள் வெளியில்

இலக வைத்துக் கொண்டு நின்ற ஒன்றி -மண்டலத்தின்1.

"மறை ஒன்றென விளம்ப" - வண்ணம் 1.

"எவையும் தன்ளு அடங்க ஒரு முதலாகும்" -வண்ணம் 3.

"அறிவொன்று என விளங்கும்" -வண்ணம் 4

"நின்ற ஒன்றே" -அகவல் 3

"என்னை ஆளும் ஒருவர்" -பன்மாலை 2

"வெளியாக வந்த ஒன்றே" - ஆகாரபுவனம் 4

"நிற்குணமாய் நின்ற ஒன்றே" -ஆகாரபுவனம் 5

"என் உள்ளத் தொருவர்" -பாயப்புலி 32

இந்தக் கருத்தை வள்ளலாரும் தம் பாடல்களில் விரிவாகக் சொல்கிறார்.

"எல்லாம் வல்லவராக ஓங்கி விளங்குகின்ற தனிக் கடவுள் ஒருவரே" எந்த இடத்திலும் எந்த உயிரிலும் விளங்கித் தோன்றுகின்ற சிவமாகிய தெய்வம் ஒன்றுதான்!" இரண்டு இல்லை!

தெய்வம் ஒன்றுதான் என்பதை நான் உணர்ந்து அந்த நெறியில் நின்றேன். அதனால் மெய்ஞ்ஞான நிலையை நான் பெற்றேன்.

ஞான சித்திகளையெல்லாம் பெற்றேன். எந்த பொருளுக்கும் எந்த உயிருக்கும் உள்ளேயும், வெளியேயும் இருந்து உண்மை அறிவு

இன்ப வடிவமாகிய, இயங்கும் மெய்ப் பொருளாகிய தெய்வம் ஒன்றுதான் என்பதை நான் அறிந்து கொண்டேன்" என்கிறார்.

"ஓண்தகு சிற்றம்பலத்தே எல்லாம் வல்லர்வராய்

ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவர் உண்டே கண்டீர்!"

"எவ்விடத்தும் எவ்வுயிர்க்கும் இயங்கு சிவம் ஒன்றே

என் ஆணை என் மகனே, இரண்டில்லை ஆங்கே!"

ஒன்றே சிவம் என்றுணர்ந்தேன் உணர்ந்தாங்கு

நின்றே மெய்ஞ்ஞான நிலைபெற்றேன்-நன்றே மெய்ச் சித்தியெலாம் பெற்றேன்"

"எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்

இயலுண்மை அறிவின்ப வடிவாகி நடிக்கும்

மெய்ப் பொருளாம் சிவம் ஒன்றே என்றறிந்தேன்."

கடவுள் ஒருவரே என்று சொன்ன பட்டினத்தார் எல்லாம் அவன் செயலே. அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது என்பதையும தெளிவாகச் சொல்கிறார்.

## கல்லில் கடவுளா?

நமது நாட்டிலே பிறந்த ஞானிகள் சிலர் உருவ வணக்கத்தைக் கண்டித்திருக்கின்றனர்.

எங்கும், எல்லாப் பொருள்களிலும் பரந்துள்ள இறைவனை ஒரு கல்லிலோ, ஒரு மரக்கடடையிலோ, ஒரு செம்புப் பதுமையிலோ இருப்பதாக நினைப்பது அறியாமை என்று பலர் பாடியிருக்கின்றனர்.

சிறப்பாகச் சித்தர்கள் என்பவர்களிலே பலர் இக்கருத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

உலக நிலையாமையைப் எண்ணிப் எண்ணிப் பாடும் பட்டினத்தாரும், விக்கிரகங்களில் இறைவன் இல்லை என்றே பாடியிருக்கின்றனர்.

அவர் பாடியுள்ள பாடல்களிலே இரண்டு பாடல்களை இங்கு காண்போம்.

இறைவன் எங்கே இருக்கின்றான் என்று தேடித் திரிந்து தடுமாற வேண்டாம். அவன் சொல் வடிவமாக நிற்கின்றான். ஆதலால் சொல்லிலே இருக்கின்றான்.

"இறைவன் சொல்லின் பொருளாக, சொல்லின் முடிவான பொருளாக இருக்கின்றான்.

"சொற்களையும், சிறந்த பொருளையும் கொண்ட வேத மந்திரப் பாடல்களிலே இறைவனைக் காணலாம். வேத மந்திரங்களின் உருவமாக இறைவன் இருக்கின்றான்."

"இரவிலும் இறைவன் பரவியிருக்கின்றான்."

"குற்றமற்ற வான வெளியெங்கும் இறைவன் பரந்து நிற்கின்றான். உலகில் உள்ள எல்லாவற்றையும் ஆராய்ந்தவர்கள், எது உண்மை, எது பொய் என்ற உண்மையை அறிந்தவர்கள், பொய்யை விலக்கி உண்மையைப் பின்பற்றி நடப்பவர்கள் ஆகிய அருளுடையோர் உள்ளத்திலே இறைவன் இருக்கின்றான் என்றும் இருப்பான்."

"யார் இறைவனையே எப்பொழுதும் நினைத்து அன்பு செலுத்துகின்றார்களோ அவர்களை விட்டு இறைவன் பிரியவே மாட்டான். எப்பொழுதும் அவர்களுடனேயே இணைந்து. இரண்டறக் கலந்து வாழ்வான்."

"உண்மையாகவே இறைவன் இருக்குமிடம் எது? சொல், சொல்லின் பொருள், வேதம், இரவு, வானவெளி, தத்துவ ஞானிகள் உள்ளம், அன்பர்கள் மனம், இவைகள் ஈசன் இருக்கும் இடம்.

இவற்றை விட்டு கல்லையும், செம்பையும் கட்டிக் கொண்டு அழுவதனால் இறைவனைக் காண முடியுமா?

கல்லிலும் செம்பிலுமா எங்கள் இறைவன் வீற்றிருப்பான்? இல்லை. இந்த உண்மையை உணருங்கள்" என்று பாடினார் பட்டினத்தார்.

சொல்லினும், சொல்லின் முடிவிலும்,வேதச் சுருதியிலும்,

அல்லிலும், மாசற்ற ஆகாயம் தன்னிலும், மாய்ந்துவிட்டோர்

இல்லிலும், அன்பர் இடத்திலும் ஈசன் இருக்கும் இடம்.

கல்லிலும் செம்பிலுமோ இருப்பான்? எங்கள் கண்ணுதலே?

பட்டினத்தார் இன்னொரு பாடலிலும்- இறைவன் உருவங்களில் இல்லை என்பதை விளக்கிச் சொல்லுகிறார்.

"உளியிட்டுச் செய்த கல்லுருவத்தை வணங்க மாட்டேன். சுண்ணாம்பைக் கொண்டு, இறைவனுக்கு ஒப்பென்று அமைந்த சுண்ணாம்புச் சிலையை வணங்க மாட்டேன்.

பிடித்த அழுக்காகிய களிம்பு போகும்படி புளியிட்டு விளக்கி வைக்கும் சொம்பால் ஆகிய உருவத்தையும் வணங்க மாட்டேன்.

ஏனென்றால், கல்லுருவிலும், சுண்ணாம்புப் பதுமையிலும், செம்புச் சிலையிலும் தெய்வம் இருப்பதாக நம்புவது அறிவீனம்."

"மாற்றுயர்ந்த பொன்போல் பிரகாசிக்கும் இறைவனுடைய இரண்டு பாதங்களையும் என் உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டேன்.

இப்படிச் செய்வதுதான் உண்மையாக இறைவனைக் காணும் முறையாகும். இதுவே பிறர் அறியும்படி செய்யும் உண்மையாகும்.

இவ்வுண்மையை வெளியிட்டு, என் உள்ளத்திலே இரண்டு பாதமலர்களையும் அடைத்து வைத்தேன்.

இதன் பிறகு நான் வேறு ஒன்றையும் விரும்பவில்லை. இதுவே எனக்கு எல்லா இன்பங்களையும் தருவதாகும்" என்று சொல்லுகிறது அப்பாடல்.

"உளியிட்டகல்லையும், ஒப்பிட்ட சாந்தையும், ஊத்தை அறப்

புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன். உயர் பொன் எனவே,

ஒளியிட்ட தாள் இரணடு உள்ளே இருத்துவது உண்மை, என்று

வெளியிட்டு, அடைத்து வைத்தேன். இனிமேல் ஒன்றும் வேண்டிலனே!

## இறைவன் இருப்பது எங்கே?

இறைவன் இருப்பது எங்கே? கேட்கிறார் தாயுமானவர்.

பேராற்றல், பேரறிவு, காலம் என்ற நான்கும் இறைவெளியின் தன்மைகளாக ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாததாக அமைந்துள்ளன. தாயுமானவர் பாடுகிறார்....

அண்டமுடி தன்னிலோ, பகிரண்டம் அதனிலோ,
அலரிமண் டலநடுவிலோ,
அனல்நடுவி லோ, அமிர்த மதநடுவி லோ,அன்பர்
அகம் உருகி மலர்கள்தூவித்

தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ, திக்குத்
திகந்தத்தி லோ, வெளியிலோ,
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ, வேதாந்த
சித்தாந்த நிலைதன்னிலோ,

கண்டபல பொருளிலோ, காணாத நிலை எனக்
கண்டசூ னியமதனிலோ,
காலம் ஒரு மூன்றிலோ, பிறவிநிலை தன்னிலோ,
கருவிகர ணங்கள் ஓய்ந்த

தொண்டர்கள் இடத்திலோ நீவீற் றிருப்பது
தொழும்பனேற்கு உளவுபுகலாய்.

சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
  சோதியே சுகவாரியே. (தா.பா.86. சுகவாரி பா.10)

- நீவிர்..எழுந்தருளி இருப்பது) அண்டமுகட்டிலா?
- பேரண்டம் அதனிலா?
- சூரிய மண்டலத்தின் நடுவிலா?
- தீயின் நடுவிலா?
- அமுத கிரணங்களைப் பரவ விடும் சந்திர மண்டலத்து நடுவிலா?
- மெய்யன்பர்கள் மனம் உருகி, மலர்கள் தூவி, விழுந்து வணங்க எழுந்தருளி இருக்கும் விக்கரங்களிலா?
- திசையிலா? திசைகளின் முடிவிலா?
- பரவெளியிலா? நாத, விந்து நிலையிலா?
- வேதாந்த, சித்தாந்த நிலையிலா?
- கண்ணால் காணப்படும் பொருள்களிலா?
- காணப்படாத சூக்கமத்திலா?
- பாழ் எனப்படும் பரவெளியிலா?
- இறந்த காலம், நிகழ்காலம்,
- எதிர்காலம் என்று அழைக்கப்படும் காலம் மூன்றிலா படைப்பிலா?
- அக்கருவிகளோடும் புறக்கருவிகளோடும் உடலெடுத்துப் பிறந்து வந்துள்ள தொண்டர்களிடத்திலா?



அடிமையாகிய எனக்கு, "நீவீர் எழுந்தருளி இருக்கும் இடம் எது?" என்பதை அறிவிப்பாயாக!

இறைவன் எழுந்திருக்கும் இடம் என்பது எது என்பதை தாயுமானவரின் கேள்விக்கு விடையாக வருகிறார் வேதாத்திரியார்.

"உன்னிலே நானடங்க, என்னுளே நீ விளங்க,

உனது தன்மை ஒளிர, எனதுள்ளம் தூய்மை பெற்றேன்" (ஞாக.பா. 1648-5)

சுத்தவெளியே தன் நிலையில் மாற்றம் பெற்று, எல்லாத் தோற்றங்களுமாகியிருக்கிறது என்பதை ஆத்மானுபவமாக



உணர்ந்போது, உனக்குள்ளாக நான் அடங்கியிருக்க, எனக்குள்ளே நீ அறிவாக விளங்குவதை உணர்ந்தேன்.

உனது தெய்வீகத் தன்மையானது எனது அறிவைத் தெளிவுபடுத்தியதால், உள்ளத்தூய்மை பெற்றுவிட்டேன்.

மனிதன் அடைய வேண்டிய பெரும் பேற்றினைப் பெற்றுவிட்டேன்.

இனி எனக்கு என்ன வேண்டும்? மனிதப் பிறப்பும் எடுத்த நோக்கம் நிறைவுற்று முழுமை பெற்றேன் என்கிறது பேரின்ப களிப்பு.

## செயற்கரிய செய்வர் பெரியர்

பல அறங்களையும் தவறாமல் செய்யும் இல்லற வாழ்க்கையுடையவன் சிறந்தவன். உயர்ந்தவன்.

அவனைக் காட்டிலும் அந்த இல்லற இன்பத்தையும் வெறுத்துத் துறவறத்தை மேற்கொள்ளுகிறவன் உயர்ந்தவன்.

அவன் இல்லறத்தானைவிட கோடி மடங்கு உயர்ந்வன் என்கிறார் பட்டினத்தார்.

"அறந்தான் இயற்றும் அவனிலும் கோடி அதிகம் இல்லம்

துறந்தான். அவனில் சதகோடி உள்ளத் துறவு உடையோன்.

மறந்தான் அறக்கற்று அறிவோடு இருந்து இருவாதனை அற்று

இறந்தான் பெருமையை என்கொல்லுவேன். கச்சி ஏகம்பனே!
(பட்.பா.5)

இப்பாடல் ”செயற்கரிய செய்வர் பெரியர்” என்ற திருக்குறளின் கருத்தோடு இசைந்திருப்பதைக் காணலாம்.

”இல்லற இன்பத்தை வெறுத்துத் துறவு பூண்டவனை விட உண்மையிலேயே உள்ளத்திலே துறவு பூண்டவன் உயர்ந்தவன்.

மனத்ததால் எந்த இன்பத்தையும் எண்ணாமல் தன்னலத்தை துறந்து வாழும் உள்ளத் துறவுள்ளவன் சாதாரண துறவியைவிட நூறுகோடி மடங்கு உயர்ந்தவன்.

இவனைக் காட்டிலும் உயர்ந்தவன் , சொல்ல முடியாத பெருமையுள்ளவன் யாரென்றால்?

குற்றமற்ற கல்வி கற்றவன். கற்றதோடு மட்டும் நில்லாமல் அறிவு நெறியிலே நிற்பவன்.

அறிவு நெறியிலே நிற்பதோடு நல்வினை, தீவினைப் பலன் களிலே நாட்டம் இல்லாமல் தன் கடமையைச் செய்து வாழ்கின்றவன் -- ஆகிய இத்தகையவனே அளவிட முடியாத பெருமையுள்ளவன் என்கிறார் பட்டினத்தார்.

இப்பாட்டின் பொருளை நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் கீழக்கண்ட முடிவுக்குத்தான் வரவேண்டும்.

உறவிலே கண்ட உண்மை நிலைத் தெளிவே துறவு” -அருட்தந்தை வேதாத்திரி மகரிசி.

தாயுமானவர், திருமணம் நிகழ்ந்து ஒரு பிள்ளை பிறந்தபின் மனைவி சிவபதம் உற்றாள்.

பிள்ளைக்கு கனகசபாபதி என்ற பெயரிடப்பட்டது. இல்லறத்தில் வீற்றிருந்த காலத்தில், தாயுமானவர் கண்ணிகள் பலவும் பாடினார்.

தமது தயார் காலமான பின்னர், தமது செல்வத்தையும் செல்வக் குமாரனையும், தமையனாரிடம் ஒப்புவித்துத் தாம் கடுந்துறவு பூண்டு கோவணம் கட்டி திரிந்தார்.

அருளைய பிள்ளையும்  பின் தொடர்ந்தனர்.  தாயுமானவர் இறைவன் தமக்குச் செய்த நன்றியை அழகாக ஒரு பாடலில் பாடுகின்றார். என்ன சொல்கிறார் அந்தப் பாடலில்......

"அலைகடல் போன்ற பெருஞ்செல்வம் துன்பம்  தருமாதலின் அதனை நல்காது ஒருவர்பின் சென்று வருந்தாமலும் கேட்பார்க்கில்லை என்னாமலும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புவதற்கு,  வேண்டிய செல்வம்- உதவி -நோயற்ற சுகவாழ்க்கை அளித்து- யோக ஞானநெறி நிற்கும் நிலையும் தந்தாய்.

வேதாந்தம் என்றும், சித்தாந்தம் என்றும். பெயரளவில் பேறுபட்டு இருந்தாலும் பொருள் அளவில் ஒன்றுதான் என்பதை முழுமையாக உணரும் நல்லறிவைத் தந்து அருளினாய்.

பொய்யான உடலை மெய் என்று எண்ணாத ஞானநெறியைக் காட்டி அருளியதும், நிலையான பேரின்பமே வீடுபேறு என்பதை உணருமாறு நீர்போல் உருகுமாறு உள்ளத்ததுக்கு அன்பினைத் தந்து அருளியதும் ஆகிய அனைத்தும் நினது திருவருளின் செயலே ஆகும்.

நீயே துணை என்று எண்ணி, என்னையே நான் காத்துக் கொள்ளவும். இடையில்  சற்றே மாறுபட்ட எண்ணம் எதுவும் உண்டாகாமல் தடுத்து, இவ்வலக வாழ்வு எதனையும்அறியாது. இடைவிடாது மோன நிலையைப் பற்றி நிற்க அருள் புரிவாயாக.

இன்னும் நின்னையே துணையென்று என்னையே காக்க ஒரு எண்ணம் உனக்கு உண்டெனின், உலக முதலிய அசத்துத் தோன்றாது சிவத்தே தோன்றும் மோன நிலையே பற்றாக நிற்க அருள்வாய்" என்கிறார் தாயுமானவர் பரிபூரணானந்தத்தில்.

வாராது எலாம் ஒழிய,  வருவன எலாம் எய்த
    மனதுசாட் சியது ஆகவே
  மருவநிலை தந்ததும். வேதாந்த சித்தாந்த
    மரபு சமரசம் ஆகவே

பூராய மாய் உணர ஊகம் அது தந்ததும்.
    பொய்உடலை நிலை அன்று எனப்

போதநெறி தந்ததும், சாசுவத ஆனந்த
போகமே வீடு என்னவே

நீராள மாய் உருக உள் அன்பு தந்ததும்
நின்னது அருள். இன்னும் இன்னும்
நின்னையே துணை என்ற என்னையே காக்கஒரு
நினைவு சற்று உண்டாகிலோ,

பாராதி அறியாத மோனமே இடைவிடாப்
பற்றாக நிற்கஅருள்வாய்.
பார்க்கும் இட ம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.". ( தா.பா.1. பரிபூர.8)

## பற்றற்ற நிலை வேண்டும்.(நிலையாமை)

தேவையுணாவாலும் , தொடர்ந்து வந்த பழக்கத்தாலும் கிடைத்துள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும் அறிவின் வளர்ச்சிக்கேற்றவாறு ஒவ்வொரு மனிதனும் தேசம், மதம், சாதி, மொழி, இனம். பொருட்கள், பந்துக்கள் என்றவைகள் மீது உரிமை கொண்டாடுகிறான்.



அந்ததந்த எல்லையில்,குறுகியும் நிற்கிறான். இததகைய நினைவை நிலையை பற்று என்று சொல்லுகிறோம். ஆனால் உயிர் நிலையை அறிந்துகொண்ட பேரறிவின் சிகரமே பற்றற்ற நிலையாகும்." என்கிறார் அருட்தந்தை வேதாத்திரி மகரிசி.

நாம் பிறந்த ஊர் நிலையனாது அன்று. விதிவசத்தால் வந்த உறவினர்களும் நிலையானவர் அல்லர்.

மிகவும் வருந்தி உழைத்துப் பெற்ற நற்பெயரும் (புகழும்) நிலையனது அன்று. கட்டிய மனைவி நிலையானவள் அல்லள்.

பெற்ற பிள்ளைகளும் நிலையையானவர் அல்லர். அப்பிள்ளைகளால் பெறும் சிறப்பும் நிலையனாது அன்று.

ஈட்டிய செல்வம் நிலையானது அன்று. இந்த உலகத்தில் யாரும் நிலையானவர் அல்லர். நினது திருவடி மட்டுமே நிலையானது என்கிறார் பட்டினத்தார்.

ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப் பெற்ற
பேரும் சதமல்ல, பெண்டிர் சதமல்ல, பிள்ளைகளும்
சீரும் சதமல்ல, செல்வம் சதமல்ல தேசத்திலே
யாரும் சதமல்ல நின்றாள் சதம் கச்சி ஏகம்பனே! (பட்.பா.17 திருஏகம்பமாலை.13)

என்னை அடிமையாகக் கொண்ட இறைவனே! என்னைப் பெற்ற தாயும் ”பிணம்” என்று சொல்லி இகழ்ந்து கைவிட்டார்.

பொருளை என்னிடம் பெற்று வாழ்வை நடத்தி வந்த மனைவியும்”போ” என்று சொல்லி அழுது புலம்பி விட்டார்.

பெருமை பெற்ற பிள்ளைகளும் ஈமத்தை வலமாக வந்து கொள்ளி வைப்பதன் முன் குடம் உடைத்து விட்டார்.

எனவே இப்பொழுது உன்னைத் தவிர வேறு பற்று இல்லாதவன் ஆகிவிட்டேன் என்று புலம்புகிறார் பட்டினத்தார்.

”என்பெற்ற தாயரும் என்னைப் பிணம்என்று இகழ்ந்துவிட்டார்

பொன்பெற்ற மாதரும்போஎன்று சொல்லிப் புலம்பிவிட்டார்

கொன்பெற்ற மைந்தரும் பினவலம் வந்து குடம்உடைத்தார்

உன்பற்ற ஒழிய ஒருபற்றும் இல்லை உடையவனே. (பட்.பா.69)

**தாயுமானவர்** " நிலையாமையில் - யாக்கை நிலையாமை " என்ற பொருளில்----- பதினொரு பாடல்களைத் தாயுமானவர் பாடியுள்ளார்.

காயநிலை அல்லஎன்று காண்பார் உறங்குவரோ
தூயஅருள் பற்றாத் தொடர்வார் பராபரமே.146.

எடுத்த உடம்பு நிலையற்றது என்ற உண்மையை அறிந்தவர், உறக்கம் கொள்வாரோ? நின்னுடைய தூய திருவருளைப் பற்றாகப் பற்ற அல்லவா, அலைந்து திரிவர்.

பொய்எல்லாம் ஒன்றாய்ப் பொருத்திவைத்த பொய்உடலை
மெய்என்றான் மெய்யாய் விடுமோ பராபரமே.178.

நிலையில்லாத பொருள்கள் அனைத்தையும் ஒன்றுதிரட்டிச் செய்து அமைத்த பொய்உடலை மெய் என்று சொல்வதால் மட்டும், அது மெய்யாய் (நிலைத்ததாய்) விடுமோ?

மின்அனைய பொய்உடலை மெய்என்று நம்பி ஐயோ
நின்னை மறக்கை நெறியோ பராபரமே.179.

மின்னல் போல் தோன்றி, விரைந்து மறையவுள்ள பொய்உடலை மெய்என்று நம்பி, ஐயகோ! நின்னை மறந்திருப்பது முறையாகுமோ?

நித்தியம்ஒன் று இல்லாத நீர்க்குமிழி போன்றஉடற்கு
இத்தனைதான் துன்பம்உண்டோ என்னே பராபரமே.180.

நிலைபேறு என்ற ஒன்று இல்லாத நீரில் தோன்றும் குமிழி போன்ற இந்த உடலுக்கு, இத்தனை துன்பம் ஏன் உண்டானது? இது என்ன அதிசியமா?

தேகம்இறும் என்றுஜடர் தேம்புவதுஎன் நித்திரையில்
ஊகம் அறிந்தால் பயம்தான் உண்டோ பராபரமே.181.

இந்த உடம்பு அழிந்துபோகும் என்று அறிவற்றவர்கள் (ஜடர்கள்) புலம்பவது ஏனோ? உறங்கும் போது (சுழுத்தியில்) உடம்பு எங்கே போனது என்பதை அறிந்து கொண்டால் பயம் உண்டாகுமோ?

ஏதைச் சுமையா எடுப்பார் எடுத்த உடல்
சேதம்உறின் யாது பின்னே செல்லும் பராபரமே.182.

எடுத்த இந்த உடம்பு அழிந்த பின்பு, வேறு எந்தவிதமான உடம்பைச் சுமையாக எடுக்கப் போகிறதோ? இந்த உடம்பு அழியும்போது. அதனுடன் இந்த உலத்துப் பொருள்களில் எது உடன் செல்லும்?

தோல்பாவை நாலால் சுமைஆகும் ஜீவன்ஒன்றுஇங்கு
ஆர்ப்பால் எடுத்ததுஎவ ராலே பராபரமே.183.

தோலால் ஆன பொம்மை உடல், நாலுபேர் சுமக்கும் சுமையாக மாறும். சீவன் என்ற ஒன்று யாரிடமிருந்து வரவழைக்கப்பட்டது? வரவழைத்தவர் யார்?

நித்திரையில் செத்தபிணம் நேரும்உடற்கு இச்சைவையாச்
சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே.197

மாயையால் ஏற்படும் மயக்கம் நீங்கினவர், வேறு உலகப் பொருள்கள் எதனையும் விரும்பமாட்டார். அவர் அன்பின் திருவருளிலே திளைத்து நிற்பர்..

கட்டும் கனமும்அந்தக் காலர்வரும் போதுஎதிர்த்து
வெட்டும் தளமோ விளம்பாய் பராபரமே.283.

உறவு, செல்வம் முதலிய பந்தமும், செல்வாக்கும், அந்த எமனார் வரும்போது, எதிர்த்து நின்று, வெட்டி வீழ்த்தும் படை ஆகுமோ? சொல்லுவாயாக!

பூட்டுஅற்றுத் தேகம்அற்றுப் போகும்முன்னே நின்அருளைக்
காட்டத் தகாதோஎன் கண்ணே பராபரமே.295.

நரம்புக் கட்டுகள் தளர்ந்து, இந்த உடல் விழும் முன்பே, நினது திருவருளைக் காட்டி அருளினால், அதுஎன்ன தகாத செயல் என்று ஆகிவிடுமோ?

தேகாதி பொய்எனவே தேர்ந்தஉப சாந்தருக்கு
மோகாதி உண்டோ மொழியாய் பராபரமே.298.

உடல் முதலியன பொய் என்று அறிந்த நல்ல சாந்த குணம் உள்ளவர்க்கு, மோகம் முதலிய குற்றங்கள் உண்டாகுமோ? கூறுவாயாகா.

தாயுமானவர் பராபரக்கண்ணயில் " நிலையாமையில் - செல்வம் நிலையாமை " என்ற பொருளில்----- இரண்டு பாடல்களைத் பாடியுள்ளார்.

நாடும் நகரும்நிசான் நாட்டிய பாளயமும்
ஈடுசெயு மோமுடிவில் எந்தாய் பராபரமே.232.

எம் தந்தையே! நாடு ஆகட்டும், நகரம் ஆகட்டும், நிஜாம்களால் ஆளப்பட்ட பாளையங்கள் ஆகட்டும், உயிர் பிரியும் காலத்தில் அவை வந்து உதவுமோ?

தேடும் திரவியமும் சேர்ந்தமணிப் பெட்டகமும்
கூட வரும்துணையோ கூறாய் பராபரமே.233.

தேடிய செல்வமும், இதுவரை சேர்த்துவைத்த நவமணிப் பெட்டியும், உயிர் பிரியும்போது, உடன் வருமோ? கூறுவாயாக!

பராபரக்கண்ணயில் " நிலையாமையில் - உலகு நிலையாமை " என்ற பொருளில்----- ஐந்து பாடல்களைத் தாயுமானவர் பாடியுள்ளார்.

வருவான்வந் தேன்எனல்போல் மன்னிஅழி யும்சகத்தைத்
தெரிவுஆக இல்லையென்ற தீரம் பராபரமே. 106.

வரஇருக்கும் ஒருவன் வந்தேன் என இறந்த காலத்தில் கூறுவது போன்ற தன்மை உடையது அழியப்போகும் உலகத்தை "இல்லை" என்று சொல்லும் உறுதிப்பாடு.

மாயா ஜகம்இலையேல் மற்றுஎனக்குபஓர் பற்றுஇலை
நீயேநான் என்றுவந்து நிற்பேன் பராபரமே. 107.

மாயையின் காரியமாய் விளங்கும் இந்த உலகம் இல்லையெனில், மற்றபடி இங்கு எனக்கு ஒரு பற்று இல்லை. நீயேதான் நான் என்று வந்து விடுவேன்.

ஞாலத்தை மெய்எனவே நம்பிநம்பி நாளும்என்தன்
காலத்தைப் போக்கினென்ன கண்டேன் பராபரமே.184.

இந்த மாயா காரிய உலகை மெய் என்று நம்பிநம்பி, நாள்தோறும் என்னுடைய காலத்தை வீணே கழித்து, என்ன பலன் கண்டேன்?

புரந்தோர்தம் தேசம்என்பார் பூமியைப்போர் ஆடி
இறந்தோரும் தம்மது என்பார் என்னே பராபரமே.228.

நிலத்தை காத்து அரசாட்சி செய்யும் அரசரும் தம்மது என்பர். போராடிப் பண்படுத்தி நிலத்தை உழுது பயிர் செய்யும் வேளாளரும் அந்நிலத்தத் தம்மது என்று கூறுவர். இது என்ன அதிசயம்!

உண்டுபோல் இன்றாம் உலகைத் திரமமெனஉள்
கொண்டுநான் பெற்றபலன் கூறாய் பராபரமே.274.

உள்ளது போல் காட்டி, அழிய இருக்கும் உலகத்தை ”உறுதி” என உள்ளத்தில் பதித்து, நான் பெற்ற பயன் யாது? சொல்லுவாயாக!

## வெறுக்கத்தக்க சில மனிதர்கள்...*

வெறுக்கத்தக்க சில மனிதர்கள் உள்ளார்கள், மற்றவர்கள் பார்த்து அஞ்சத்தக்க மனிதர்கள் உள்ளனர், அவர்கள் யார் என்பதை நாம் அறியவேண்டும்,

அத்தகைய மனிதர்களிடம் நாம் எப்போதும் கொஞ்சம் பாதுகாப்புடனேயே நடந்து கொள்ள வேண்டும்.

அம் மனிதர்கள் யார் என்று பட்டினத்தார் சொல்கிறார்,

அனைவருக்கும் புரியும் விதமாக மிகத்தெளிவாக அம்மனிதர்கள் பற்றிச் சொல்கிறார்.

வீண் வாதத்துக்கும் வீண் சண்டைக்கும் போவார்கள், வாதுக்கு வரமாட்டோம் என்றாலும், சண்டைக்கு வரமாட்டோம், என்றாலும், விடமாட்டார்கள் , வலிய இழுப்பார்கள்.

நன்மைக்கு உதவி செய்யார், தீமை என்றால் அதற்கு உதவ தயங்கமாட்டார்.

தினந்தோறும், துன்பப்பட்டு வஞ்சகம் செய்து பணம் சேர்ப்பார், அந்தப் பணத்தை தான் விரும்பும் ஒரு பெண்ணுக்கு கொடுத்து அவள் ஆசையிலே மயங்கிக் கிடப்பர்.

அதாவது தான் சாகும் வரை இப்படியே நாளைப் போக்குவர். இப்படிப் பட்ட மனிதர்கள் இவ்வுலகில் ஏன் பிறந்தார்கள், இறைவனே என்று பாடுகிறார்.

வாதுக்குச் சண்டைக்குப் போவார். வருவார் வழக்குரைப்பார்

தீதுக்கு உதவியும் செய்திடு வார்தினம் தேடி ஒன்று

மாதுக்கு அளந்து மயங்கிடு வார்விதி மாளும்மட்டும்

ஏதுக்கு இவர் பிறந்தார் இறைவா கச்சி ஏம்பனே.” (பட்.பா.18)

சிலமனிதர்கள் உண்மை என்பதையே பேசி அறிய மாட்டார்கள், நல்லவர்களை ஒருநாளும் போற்ற மாட்டார்கள்.

நல்லோரை நிந்திப்பதையே கொள்கையை இருப்பார்கள்.

வசை பாடுவதற்கு இன்னார் என்று பாராமல் தன்னைப் பெற்று வளர்த்த தாயையே திட்டுவார்கள்,

வணங்க வேண்டிய தாயையே பழித்துப் பேசும் இவர்கள் பயங்கரமானவர்களே.

நல்ல செயல்களைப் பற்றி சிந்திக்கவே மாட்டார்கள். மற்றவர்களை எந்த வம்பில் மாட்டி விடலாம் என்று சதா சதி திட்டம் போடுவார்கள்.

தமக்காக உளைத்தவர்களுக்குக் கூட உபகாரம் செய்யாத இவர்கள் இருப்பதால் எவருக்கும் லாபமில்லை, இவர்கள் இறந்தாலும் நட்டமில்லை என்கிறார் பட்டினத்தார்.

"ஓயாமல் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்பர் உற்றுப்பெற்ற

தாயாரை வைவர் சதி ஆயிரம் செய்வர் சாத்திரங்கள்

ஆயார் பிறர்க்கு உபகாரம் செய்யார் தடை அண்டினர்க்கு ஒன்று

ஈயார் இருந்து என்ன போய் என்ன காண கச்சி ஏகம்பனே." (பட்.பா.18)

ஆகவே , இவ்வாறான மனிதர்களிடமிருந்து விலகி, மனித சமுதாயத்திற்கு உதவும் உத்தமர்களா வாழுங்கள், பண்புள்ள மனிதர்களாக வாழுங்கள்! என்கிறார் பட்டினத்தார்.

பட்டினத்தார் குறிப்பிடும் இத்தகைய மனிதர்கள் எந்நாளில் திருந்தி நல்வாழ்வு பெறுவார்களோ என்று ஏங்குகிறார் தாயுமானவர்.

" ஐம்பூதத் தாலே அலக்கழிந்த தோடமற
எம்பூத நாதனருள் எய்துநாள் எந்நாளோ. (தா.பா.1142.தத்துவமுறை.1)

ஐம்பூதங்களால் ஆன இந்த உடம்பில இருந்து, அலைக் கழிக்கப்பட்டு இருவினைக்கு ஈடாய் நன்மை தீமைகளை அனுபவித்தது போதும். இனி பூத நாதனாக விளங்கும் எம் இறைவன் அருளை அடையும் நாள், எந்நாளோ?

சத்தமுத லாம்புலனிற் சஞ்சரித்த கள்வரெனும்
பித்தர்பயந் தீர்ந்து பிழைக்கு நாள் எந்நாளோ. 2.

ஓசை முதலாகச் சொல்லப்பட்ட ஐம்புலன் வழி வரும் ஐந்து வகை ஆசை என்னும் திருடர் ஆகிய பித்தர்களது பயத்தை போக்கி, என்னைப் பிழைப்பிக்கச் செய்யும் நாள், எந்நாளோ?

நாளும் பொறிவழியை நாடாத வண்ணம்எமை
ஆளும் பொறியால் அருள்வருவது எந்நாளோ. 3.

நாள்தோறும் ஐந்து பொறிகள் (அறிவுக்கருவிகள்) வழியாக அனுபவிக்கும் இன்பத்தை விரும்பாமல், எம்மை ஆட்கொண்டு அருள்செய்யும், மூதறிவால் பேரருள் வருவது எப்பொழுதோ?

வாக்காதி யானகன்ம மாயைதம்பால் வீண்காலம்
போக்காமல் உண்மை பொருந்துநாள் எந்நாளோ. 4.

வாங்கு முதலாகச் சொல்லப்பட்ட தொழிற் கருவிகளால் செய்யப்படும் செயலால் பாவ, புண்ணியம் ஈட்டி. மாயையில் அழுந்தி, வீணே காலத்தைக் கழிக்காமல். மெய்ப் பொருளாகிய திருவருளைப்பொரந்தும் நாள், எந்நாளோ?

மனமான வானரக்கைம் மாலையாக் காமல்
எனையாள் அடிகளடி எய்துநாள் எந்நாளோ. 5.

குரங்கு கையில் கிடைத்த பூமாலைபோல் மனத்தின் வசப்பட்டு சீரழியாமல். என்னை அடிமை கொண்ட இறைவனது திருவடிகளை அடையும் நாள், எந்நாளோ?

வேட்டைப் புலப்புலையர் மேவாத வண்ணம் எனக்
காட்டைத் திருத்திக் கரைகாண்பது எந்நாளோ. 6.

வேட்டையாடும் புலையர் போன்ற புலன்கள் வழி செல்லாத வண்ணம், மனமாகிய காட்டினைப் பண்படுத்தி. அதன் எல்லையைக் காண்பது எப்பொழுதோ?

உந்து பிறப்பிறப்பை உற்றுவிடா தெந்தையருள்
வந்து பிறக்க மனமிறப்ப தெந்நாளோ. 7.

மீண்டும் மீண்டும் பிறப்பு இறப்பில் வராது இருக்க, எம் தந்தையின் திருவருள் துணைவேண்டும். அந்தத் திருவருளும் மனம் இறந்துபட்ட நிலையில் கைகூடும். அது கைகூடுவது எப்பொழுதோ?

புத்திஎனுந் துத்திப் பொறியரவின் வாய்த்தேரை
ஒத்துவிடா தெந்தையருள் ஓங்குநாள் எந்நாளோ. 8.

பாம்பின் வாயில் அகப்பட்ட தேரை போல் புத்தியின் வசம் அகப்பட்ட உயிருக்குத் துன்பம் நேரும். அது நேராதிருக்க. எம் தந்தையின் திருவருள் ஓங்க வேண்டும். அது நிகழ்வது எப்பொழுதோ?

ஆங்கார மென்னுமத யானை வாயில்கரும்பாய்
ஏங்காமல் எந்தையருள் எய்துநாள் எந்நாளோ. 9.

மதங்கொண்ட யானையின் வாயில் அகப்பட்ட கரும்பு போல ஆங்காரம் எனப்படும் தன்முனைப்பு கொண்டு. துன்புறும் உயிருக்கு, எம் தந்தையின் திருவருள் பதிவது எப்பொழுதோ?

சித்தமெனும் பௌவத் திரைக்கடலில் வாழ்துரும்பாய்
நித்தமலை யாதருளில் நிற்குநாள் எந்நாளோ. 10.

சித்தம் என்னும் பிறவியாகிய அலைவீசம் கடலில் துரும்புபோல அலைக்கழியாத, திருவருளில் ஒன்றி நிற்பது எப்பொழுதோ?

வித்தியா தத்துவங்கள் ஏழும் வெருண்டோடச்
சுத்தபர போகத்தைத் துய்க்குநாள் எந்நாளோ. 11.

வித்யா தத்துவங்கள் ஏழும் அஞ்சி ஓடும்படி செய்து. தூய மேலான சிவபோகம் அனபவிக்கும் நாள், எந்நாளோ?

சுத்தவித்தை யேமுதலாத் தோன்றுமோர் ஐந்துவகைத்
தத்துவத்தை நீங்கிஅருள் சாருநாள் எந்நாளோ. 12.

சுத்தவித்தை முதலாகச் சொல்லப்பட்ட சுத்த தத்துவங்கள் ஓர் ஐந்தும் நீங்கி, அருளைச் சாரும் நாள், எந்நாளோ?

பொல்லாத காமப் புலைத்தொழிலில் என்னறிவு
செல்லாமல் நன்னெறியிற் சேருநாள் எந்நாளோ. 13.

தீய காமமாகிய புலால்தொழிலில் என் அறிவு செல்லாதபடி, நன்னெறியில் சேரும் நாள், எந்த நாளோ?

அடிகளடிக் கீழ்க்குடியாய் யாம்வாழா வண்ணங்
குடிகெடுக்கும் பாழ்மடிமைக் கூறொழிவ தெந்நாளோ. 14.

எம் இறைவனது திருவடிக்குக் கட்டுப்பட்ட குடியாய், யாம் வாழாதபடிக்குத் தடுத்து. குடிகெடுக்கும் வீணான சோம்பலின் கூறு ஒழிவது எப்பொழுது?

ஆன புறவிக்கருவி ஆறுபத்தும் மற்றுளவும்
போனவழி யுங்கூடப் புல்முளைப்ப தெந்நாளோ. 15.

தத்துவங்கள் போலவே தாத்துவிகங்கள்அறுபதும், மற்றுமுள்ளனவும், போன வழியில்கூட புல் முளைப்பது எப்பொழுதோ?

அந்தகனுக் கெங்கும்இரு ளானவா றாஅறிவில்
வந்தஇருள் வேலை வடியுநாள் எந்நாளோ. 16.

பிறவிக் குருடனுக்கு எங்கும் இருளாகவே தோன்றுவது போல என் அறிவை மயக்கி வந்த ஆணவமல இருள் என்னும் கடல், வரளும் நாள் எந்நாளோ?

புன்மலத்தைச் சேர்ந்துமல போதம் பொருந்துதல்போய்
நின்மலத்தைச் சேர்ந்துமல நீங்குநாள் எந்நாளோ. 17.

இழிவான மும்மலத்தோடு சேர்ந்து தற்போதம் பொருத்த வாழ்தல் போய், மலமற்ற இறைவனைச் சேர்ந்து மும்மலக் கறைகைளப் போக்கும் நாள், எந்நாளோ?

கண்டுகண்டுந் தேறாக் கலக்கமெல்லாந் தீர்வண்ணம்
பண்டைவினை வேரைப் பறிக்குநாள் எந்நாளோ. 18.

பலமுறையும் பலவாறாகக் கண்ட பின்னும், தெளிவு பெறாத கவலை எல்லாம் தீரும்படி, பழைய வினையின் வேரைப் பறிக்கும்நாள், எந்நாளோ?

பைங்கூழ் வினைதான் படுசாவி யாகஎமக்
கெங்கோன் கிரணவெயில் எய்துநாள் எந்நாளோ. 19.

பசிய பயிர்போல் தழைத்து வளரும் வினை விளையா வண்ணம் (சாவி ஆகுமாறு) எமக்கு, எம்தலைவனின் ஒளிக்கதிர்கள் படும்நாள், எந்நாளோ?

குறித்தவித மாதியாற் கூடும்வினை எல்லாம்
வறுத்தவித்தாம் வண்ணம்அருள் வந்திடுநாள் எந்நாளோ. 20.

மனம் மொழி, மெய், ஆகிய மூன்றினாலும் வந்துசேரும் வினையாகிய விதையானது. வறுத்த விதை ஆகுமாறு திருவருள் வந்து சேரும் நாள், எந்நாளோ? (வறுபட்ட விதை மீண்டும்

முளைக்காரது...அதாவது பிறப்பு அறுபடும் என்பது கருத்து,)

சஞ்சிதமே யாதி சரக்கான முச்சேறும்
வெந்தபொரி யாகஅருள் மேவுநாள் எந்நாளோ. 21.

சஞ்சிதம் , பிராதத்தம், ஆகாமியம் ஆகிய மூன்று பொருள்களாகிய சேறும் வரண்டு, வறுத்த பொரி போல் ஆகு, திருவருள் பொருந்தும் நாள், எந்நாளோ?

தேகமுதல் நான்காத் திரண்டொன்றாய் நின்றிலகும்
மோகமிகு மாயை முடியுநாள் எந்நாளோ. 22.

உடல், கருவி, உலகம், நுகர்ச்சிப் பொருள் என்னும் நான்கும் ஒன்றாய் நின்று விளங்கும், ஆசையை உண்டுபண்ணும் மாயை முடியும் நாள், எந்நாளோ?

சத்த முதலாத் தழைத்திங் கெமக்குணர்த்துஞ்
சுத்தமா மாயை தொடக்கறுவ தெந்நாளோ. 23.

சத்தம் எனப்படும் வாக்குகளாக விளங்கும் (வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமை) இவை தழைத்து, எமக்கு உணர்த்தும் சுத்த மாயையின் தொடக்கு அறும் நாள், எந்நாளோ?

எம்மை வினையை இறையைஎம்பாற் காட்டாத
அம்மை திரோதை அகலுநாள் எந்நாளோ. 24.

எம்மையும், எமது வினையையும், எம் இறைவனையும் எமக்குக் காட்டாது மறைத்து நிற்கும் மறைப்பாற்றலாகிய அம்மை திரோதாயி எம்மை விட்டு அகலும் நாள், எந்நாளோ?

நித்திரையாய் வந்து நினைவழிக்குங் கேவலமாஞ்
சத்துருவை வெல்லுஞ் சமர்த்தறிவ எந்நாளோ. 25.

உறக்கம் (சுழுத்தி) என்னும் அவத்தையில் நினைவு அனைத்தையும் அழித்து நிற்கும் கேவலம் (இருள்நிலை - ஆணவமல மறைப்புடன் கூடிய நிலை) ஆகிய பகையை வெல்லும் சாமர்த்தியம் அறிவது எப்பொழுதோ?

சன்னல்பின்ன லான சகலமெனும் குப்பையிடை
முன்னவன்ஞா னக்கனலை மூட்டுநாள் எந்நாளோ. 26.

சன்னல் (சாளரம்) போன்ற உடம்பில் உயிர் பின்னிக் கிடக்கும் சகலம் (மருள்நிலை) என்னும் குப்பையில்கிடந்த உழலும்போது (உலக வாழ்வில் சிக்கிசி சீரழியும் போது) முதல்வனாகிய இறைவன், ஞானத்தீயை மூட்டும் நாள், எந்நாளோ?

மாயா விகார மலமொழிசுத் தாவத்தை
தோயா அருளைத் தொடருநாள் எந்நாளோ. 27.

மாயையினால் காரியப்பட்டு ஈட்டிய வினை என்னும் கன்ம மலமும் ஒழிந்து, சுத்த அவத்தை (அருள்நிலை) யில் தோய்ந்து, திருவருளில் திளைத்திருக்கும் நாள், எந்நாளோ?

## கணக்கெடுக்கும் பட்டினத்தாரும் தாயுமானவரும்

வணிகம் செய்கிறவர்கள் வரவுசெலவுகளைக் கணக்கிட்டு, ஆகமொத்தம் இந்த வணிகத்தால் நமக்கு வந்த ஊதியம் அல்லது இழப்பு இவ்வளவு என்று மதிப்பிட்டுக் கொள்வார்கள்.

அதைப்போல, வாழ்வின் வரவுசெலவுகளைக் கணக்கிட்டு இந்த முறையிலான வாழ்வினால் நமக்கு வந்த ஊதியம் அல்லது இழப்பு இவ்வளவு என்று மதிப்பிட்டுக்கொள்ள முடியுமா?

தாயுமானவர் ஒரு கணக்கெடுக்கிறார்:

*...யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்*

*உறங்குவதும் ஆகமுடியும்;*

*உள்ளதே போதும்நான் நான்எனக் குளறியே*

*ஒன்றைவிட்டு ஒன்றுபற்றிப்*

*பாசக் கடற்குளே வீழாமல் மனதுஅற்ற*

*பரிசுத்த நிலையைஅருள்வாய்,*

*பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற*

*நிறைகின்ற பரிபூரணானந்தமே.* (*தாயுமானவர், பரிபூரணானந்தம்,* 10)

கணக்கெடுத்துப் பார்த்தால், பசி தீரச் சாப்பிட்டிருக்கிறோம்; படுத்து உறங்கியிருக்கிறோம். அல்லாமல் வேறென்ன?

உள்ளதே போதும் என்று ஒரு பொழுதேனும் தோன்றியிருக்கிறதா?

'நான், நான்' என்னும் அறிவற்ற குளறல் என்றைக்காவது அற்றுப் போயிருக்கிறதா?

அதை விடுவோம், தாவி இதைப் பிடிப்போம்; இதை விடுவோம், தாவி வேறொன்றைப் பிடிப்போம்;

தாவித் தாவிப் பிடித்துக் கடைசியில் பிடிமானமில்லாமல் பற்றாகிய பாழங்கடலுக்குள் விழுந்து அமிழ்வோம்.

அல்லாமல் வேறென்ன?

அவ்வாறெல்லாம் ஆகிவிடாமல், இனி என்னைப் புதிய உயிர் ஆக்கி, மனம் தன்னை மிகத் தெளிவு செய்து, என்றும் ஆனந்தம் கொண்டிருக்கச் செய்வாய் என்று பரிபூரண ஆனந்தத்தை வேண்டுகிறார் தாயுமானவர்.

முற்றத் துறக்கும் முன், அரசக் கணக்கெழுதியவர் தாயுமானவர். பட்டினத்தாரும் அவ்வாறே.

முற்றத் துறக்கும் முன், வணிகக் கணக்கெழுதியவர் பட்டினத்தார்.

தாயுமானவரைப் போலவே பட்டினத்தாரும் வாழ்க்கைக் கணக்கெடுக்கிறார்:

*உண்டதே உண்டும், உடுத்ததே உடுத்தும்,*

*அடுத்து அடுத்து உரைத்ததே உரைத்தும்,*

*கண்டதே கண்டும், கேட்டதே கேட்டும்*

*கழிந்தன கடவுள் நாள் எல்லாம்;*

*விண்டதா மரைமேல் அன்னம்வீற்று இருக்கும்*

*விழவுஅறா வீதிவெண் காடா,*

*அண்டரே போற்ற அம்பலத்து ஆடும்*

*ஐயனே, உய்யுமாறு அருளே. (பட்டினத்தார், திருவெண்காட்டுத் திருவிசைப்பா)*

உண்டதைத்தான் உண்கிறோம்; உடுத்ததைத்தான் உடுக்கிறோம்; பேசியதையே திரும்பத் திரும்பப் பேசுகிறோம்;

பார்த்ததையே பார்க்கிறோம்; கேட்டதையே கேட்கிறோம். திரும்பிப் பார்த்தால், ஐயோ, கடவுளைக் கண்டு கொள்வதற்காக வழங்கப்பட்ட நாட்களை அல்லவா வீணாக்கியிருக்கிறோம்?

திருவெண்காட்டு ஈசா, இவ்வாறு உழற்றாமல், என்னைச் சரியான திசைக்குத் திருப்பி ஆட்கொள்ள மாட்டாயா?

**அறிந்ததைக் கணக்கெடுக்கும் திருமூலர்**

தாயுமானவரைப் போலவும் பட்டினத்தாரைப் போலவும் கணக்கெழுதும் பயிற்சி உள்ளவரா திருமூலர் என்று தெரியவில்லை.

என்றாலும் அவரும் கணக்கெடுக்கிறார். ஆனால், இவர் போடும் கணக்கு கொஞ்சம் வேறாக இருக்கிறது.

தாயுமானவரும் பட்டினத்தாரும் உண்டதை, உடுத்தியதைக் கணக்கெடுக்கிறார்கள். திருமூலர் அறிந்ததைக் கணக்கெடுக்கிறார்:

*உற்றுஅறிவு ஐந்தும், உணர்ந்துஅறிவு ஆறுஏழும்,*

*கற்றுஅறிவு எட்டும், கலந்துஅறிவு ஒன்பதும்,*

*பற்றிய பத்தும், பலவகை நாழிகை*

*அற்றது அறியாது அழிகின்ற வாறே (திருமந்திரம் 741)*

- மெய், வாய், கண், மூக்கு, செவி என்று புலன்களின் வழியாக உற்று அறிந்த வகையில் அறிவு ஐந்து;
- புலன்களால் உற்று அறிந்தவற்றையெல்லாம் மனத்தினுள் வாங்கிக் கொண்ட வகையில் அறிவு ஆறு;
- வாங்கிக் கொண்டவற்றையெல்லாம் வகைப்படுத்தித் தொகுத்து, உணர்ந்துகொண்ட வகையில் அறிவு ஏழு

- முற்றறிவு பெறுவதற்கு, உற்றும் உணர்ந்தும் அறிந்தவை போதாதென்று, அறிஞர் பெருமக்கள் உணர்ந்து சொன்னவற்றைக் கசடறக் கற்று அறிந்த வகையில் அறிவு எட்டு;
- கசடறக் கற்று, அறிந்தவற்றுக்குத் தக நின்று, தானே பட்டும் அறிந்த வகையில் அறிவு ஒன்பது;
- பட்டு அறிந்தவற்றையெல்லாம் 'தனது' என்று பற்றிக்கொண்ட வகையில் அறிவு பத்து.

அறிந்தாலும் என்ன, அறியாவிட்டாலுந்தான் என்ன என்று கருதத்தக்க அற்பங்களையெல்லாம் அறிவதிலேயும் அவற்றைத் தனதாக்கிப் பற்றிக் கொள்வதிலேயும் காலம் கழிகிறது.

காலம் கழிகிறது என்பதையே அறியாமல், ஐயோ, வாழ்வு அழிகிறதே?

**தளைப்படுத்துவது எது?**

அறிவுதான் விடுதலை செய்யும். விடுதலை செய்ததா என்று கணக்குப் பார்த்தால் செய்யவில்லை. என்றால் என்ன கோளாறு?

விடுதலை தருவது எதுவோ அதை அறிந்து அதில் ஈடுபடாமல், தளைப்படுத்துவது எதுவோ அதை அறிந்து அதில் ஈடுபட்டது.

*கொங்குபுக் காரொடு வாணிபம் செய்தது*

*அங்குபுக் கால்அன்றி ஆய்ந்துஅறி வார்இல்லை;*

*திங்கள்புக் கால்இருள் ஆவது அறிந்திலர்;*

*தங்குபுக் கார்சிலர் தாபதர் ஆமே.* (*திருமந்திரம்* 2930)

## அருட்புலம்பல் அருட்புலம்பல்

அருள் புலம்பல் என்பது, அருள் நோக்கத்துடன் புலம்புவது என்று பொருள்படும். இறைவன் அருளை வேண்டிப் புலம்புதல் என்றும் பொருள் கொள்ளலாம்.

பட்டினத்தார் பாடலிலே அருட் புலம்பல் என்று ஒரு பகுதி உண்டு. அதில் உள்ள பாடல்கள் இரண்டு அடிகள் கொண்ட கண்ணிகள்.

அவைகளில் பல உண்மைகள் காணப்படுகின்றன. யோக மார்க்கத்தை வலியுறுத்திக கூறும் கண்ணிகளும் அவைகளில் உண்டு.

இறைவன் வேறு எங்கும் இல்லை. நமது உடம்புக்குள் தான் இருக்கின்றான்.

யோகத்தால் - நிஷ்டையால் - தியானத்தால் அவனை நம்முள்ளேயே காணலாம் என்று வலியுறுத்தும் பாடல்களைக் காணலாம்.

"முக்கு முனையை முழித்திருந்து பாராமல்

ஆக்கைகெட்டு நானும் அறிவிழந்தேன் பூரணமே!"

"பூரணமே! மூக்கின் நுனியென்னும் சுழுமுனையைக் கண்விழித்துப் பார்ப்பதாகிய கோகத்தில் ஈடுபடாமல், எனது உடலும் கெட்டு அறிவும் அழிந்தேன்."

இவ்வடிகள் யோகத்தின் இயல்பை எடுத்துக் காட்டின. உள்ளத்தை ஒருவழிப்படுத்துவதாகிய தியானத்தால் - யோகத்தால் -உடல்நலம் பெறலாம்.

தேகத்தை, தியானத்தை அலட்சியம் செய்வோர் உடல் உறுதி குலைவர். நோய்களுக்கு ஆளாகி வருந்துவர்.

இவ்வுண்மையை அறியாதவர்கள் அறிவு அற்றவர்கள். மேலே காட்டிய அடிகளால் இவ்வுண்மையை அறியலாம்.

இடைபிங் கலையின் இயல்பறி மாட்டாமல்

தடையுடனே யானும் தயங்கினேன் பூரணமே!"

பூரணமே! இடைகலை, பிங்கலை என்று சொல்லப்படும் சந்திரகலை, தன்மைகளைத் தெரிந்து கொள்ள முடியாமல் தடைப்பட்டு நின்றுவிட்டேன்."

இவ்வடிகளும் யோக மார்க்கத்தின் உயர்வை எடுத்துக் காட்டின.

மூக்கின் இடது துவாரத்தின் வழியாக வரும் மூச்சுக்கு இடைகலை என்று பெயர். இதனையே சந்திரகலை என்பர்.

மூக்கின் வலது துவாரத்தின் வழியாக வரும் மூச்சுக்குப் பிங்கலையென்பர். இதனைச் சூரியகலை என்பர்.

இவ்வாறு வரும் மூச்சைக் கட்டுப்படுத்தி ஓர் அளவில் நிறுத்துவது யோகப் பயிற்சியாகும்.

"ஊனுக்குள் நீநின்று உலவினதைக் காணாமல்

நான்என்று இருந்து நலன் அழிந்தேன் பூரணமே!"

"பூரணமே! என் உடம்பிலேயே நீ, ஜீவாத்மா பரமாத்மா என்ற பேதமின்றி ஒன்றாக நின்று உலவுகின்றாய். இதனை நான் அறியாமல், நான் என்னும் அகந்தை கொண்டேன். நன்மைகளை இழந்தேன்."

"உடலுக்குள் நீநின்று உலாவினதைக் காணாமல்

கடல்மலை தோறும் திரிந்து கால் அலுத்தேன் பூரணமே!

"பூரணமே! எனது உடம்புக்குள்ளே நீ இருந்து உலாவுகின்றதை அறியாமல், கடல் தாண்டித் தேடியும், மலைகளிலே தேடியும் கால்கள் சலித்துப் போனேன்."

மேலே காட்டிய இரண்டு கண்ணிகளும், "இறைவன் வேறு எங்கும் இல்லை. நமது உடம்பிலேயே உறைகின்றான். ஆத்மாவுடன் ஒன்றுபட்டே உறைகின்றனர்" என்று கூறின.

இந்த உண்மையை உணர்ந்தவர்கள் மனக்கவலையின்றி வாழலாம் - வாழ்வார்கள் என்று மற்றொரு கண்ணியில் கூறுகிறார்.

எனக்குள்ளே நீயிருக்க, உனக்குள்ளே நான்இருக்க,

மனக்கலை தீர வரம்அருள்வாய் பூரணமே!

"நீயும் நானும் ஒன்று என்ற உண்மையை அறிந்து, எனக்குள் நீயிருக்கவும், உனக்குள் நான் இருக்கவும் செய்வாய். இப்படிச் செய்தவன் மூலம் மனக்கலையின்றி வாழ்வதற்கு வரம் தந்து அருள்வாய்" என்பதே இந்தக் கண்ணி.

இவ்வாறு இறைவனும் உயிரும் ஒன்று என்னும் உண்மையைப் பட்டினத்தார் வலியுறுத்தி யிருக்கின்றார்.
இறைவனும் உயிரும் ஒன்று என்ற உண்மையை உணர்ந்தவர்கள் யாரிடமும் போதம் பாராட்ட மாட்டார்கள்.

எல்லா உயிர்களையும் ஒன்றெனக் காண்பார்கள். தீமை செய்ய மாட்டார்கள். மக்கள் அவைரையும் ஒன்றாகவே நேசிப்பார்கள்.

மக்களிடம் சாதி, மொழி, இன, நிற, மத பேதங்களும் பாராட்ட மாட்டார்கள். மனித குலம் - மனித இனம் ஒன்றே என்ற உண்மையை மறக்க மாட்டார்கள். இந்த உண்மையைப் பட்டினத்தார் அருட் புலம்பலிலே காணலாம்.

"ஏழுவகைத் தோற்றத்து இருந்துவினை யாடினதைப்

பழுதறவே பாராமல்பயன்இழந்தேன் பூரணமே!"

"பூரணமே! தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்றும் ஏழு வகையான பிறப்புகளிலும் நீயே தங்கியிருக்கின்றாய். விளையாடுகின்றாய். இதனை நான் குற்றமின்றித தெரிந்து கொள்ளாமல் வீணன் ஆனேன்."

"சாதி பேதங்கள் தமையறிய மாட்டாமல்

வாதனையால் நின்று மயங்கினேன் பூரணமே!"

"பூரணமே! சாதி வித்தியாசங்கள் பாராட்டுவது - கற்பிப்பது - தெய்வ நெறிக்கு மாறானது என்பதை அறியாமல் போனேன். அதனால் - சாதிபேதம் பாராட்டுவதனால் - விளையும் திமையை அறியாமல

போனேன். ஆதலால் சாதிபேதம் பாராட்டித் துன்பத்திலே நின்று கலங்கினென்."

இவ்வாறு சாதி வித்தியாசக் கொடுமையைக் கண்டித்தார். சாதி வித்தியாசம் பாராட்டுவது அறியாமை என்பதையும் எடுத்துக் காட்டினார்.

"குலம் ஒன்றாய் நீபடைத்த குறியை அறியாமல்நான்

மலபாண்டத் துள்ளிருந்து மயங்கினேன் பூரணமே!"

"பூரணமே! மனித குலத்தை ஒன்றாகவே நீ படைத்ததிருக்கும் கருத்தை நான் தெரிந்து கொள்வில்லை. மனம் நிறைந்த பாண்டமாகிய இந்த உடம்பில் நான் கட்டுப் பட்டிருந்து கலங்கினேன்."

இந்த அடிகளும், மனிதகுலம் ஒன்றே என்பதை எடுத்துக் காட்டின. எந்நாட்டு மனிதர் ஆயினும், எந்நிற இனத்ராயினும் எல்லார் இயல்பும் ஒன்றுதான்.

மனித உடல், நரை திரை, மூப்பு, பிணங்களுக்கு இடமானது.

எல்லா உடல்களுக்கும் வாழ்வும் சாவும் ஒன்றுதான்.

உடம்புக்குரிய பொதுத்தன்மை, உலகில் உள்ள எல்லா மனித உடல்களும் ஒன்றுதான்.

இவ்வுண்மையை உணர்ந்தோர் மக்களுக்குள் உயர்வு தாழ்வு பாராட்டமாட்டார்கள். இவ்வுண்மையும் இக் கண்ணியிலே பொதிந்து கிடக்கின்றது.

இத்தகைய சிறந்த சமரச ஞானம் படைத்தவர் பட்டினத்தார். அவர் ஒரு சமரச ஞானி எனப்தபதில் ஐயமில்லை.

" "அருள்தாகம் - நிறைவுக்கு ஏக்கம்" என்ற பொருளில்----- பராபரக்கண்ணயில் தாயுமானவர் பதினைந்து பாடல்களைத்

என்புஉருகி நெஞ்சம் இளகிக் கரைந்துகரைந்து
அன்புஉருவாய் நிற்க அலந்தேன் பராபரமே. 21

எலும்பு உருகி, மனம் இளகிக் கரைந்து கரைந்து, அன்பே உருவமாய் நிற்க, அலைந்து வருந்தினேன்.

சுத்த அறிவாய்ச் சுகம்பொருந்தின் அல்லால்என்
சித்தம் தெளியாகுஎன் செய்வேன் பராபரமே. 22.

மலமற்ற, தூய அறிவுடன், பேரின்பம் பொருந்தின் அல்லால், என் சிந்தையில் தெளிவு பிறக்காது. இதற்கு நான் என்ன செய்வேன்?

மாறா அநுபூதி வாய்க்கின்அல்லால் என்மயக்கம்
தேறாதுஎன் செய்வேன் சிவமே பராபரமே. 23.

என்றும் மாறுதல் இல்லாத, பேரின்ப அனுபவம் கிடைக்காமல், எனது, அறியாமை மயக்கம் தெளிவு பெறாது. இதற்கு நான் என்ன செய்வேன்?

தாகம்அறிந்து இன்பநிஷ்டை தாராயேல் ஆகெடுவேன்
தேகம் விழுந்திடின்என் செய்வேன் பராபரமே. 24.

அடியேன் கொண்டுள்ள பெருவிருப்பினை அறிந்து, இன்ப நிட்டை தாரது ஒழியின், அந்தோ! கெட்டு ஒழிவேன். உடம்பு விழுந்துவிட்டால், அதற்பிறகு என்ன செய்வேன்?

அப்பாஎன் எய்ப்பில் வைப்பே ஆற்றுகிலேன் போற்றி என்று
செப்புவதல் அலால் வேறு என் செய்வேன் பராபரமே. 25.

அப்பா! வறுமைக் காலத்தில் உதவ சேமித்து வைத்த பொருளே! பொறுக்க முடியாதவனாய் இருக்கிறேன். போற்றி! என்று சொல்வதைத் தவிர, வேறு என்னால் என்ன செய்ய முடியும்?

உற்றுஅறியும் என்அறிவும் உட்கருவி போல் சவிமாண்டு
அற்றும் இன்பம் தந்து இலையே ஐயா பராபரமே. 26.

ஐம்பொறிகள் வழிப் பெறும் என்னுடைய அறிவும், அதுபோல அகக்கருவிகளால் பெறும் அறிவும், ஒளி மழுங்கி செயலற்ற பின்னும் நினது இன்பத்தை, ஐய! நீ தந்தருளவில்லையே!

சொல்லால் அடங்காச் சுகக்கடலில் வாய்மடுக்கின்
அல்லால்என் தாகம் அறுமோ பராபரமே. 27.

சொல்லால் வருணிக்க முடியாத பேரின்பத்தை, அப்பேரின்பக் கடலில் வாய் வைத்துப் பருகினால் அன்றி, எனது தாகம் தீருமோ?

பாராயோ என்னை முகம் பார்த்து ஒருகால் என்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே. 28.

என்முகத்தை ஏறெடுத்துப் பார்க்க மாட்டாயோ? ஒரு முறையேனும் பார்த்து, என் கவலையைத் தீர்க்கமாட்டாயோ? வாய் திறந்து விடை கூறுவாயாக!

ஓயாதோ என்கவலை உள்ளேஆ னந்த வெள்ளம்
பாயாதோ ஐயா பகராய் பராபரமே. 29.

என் கவலை ஒருபோதும் தீராதோ? என் உள்ளே பேரின்ப வெள்ளம் பெருகி ஓடாதோ? ஐயனே! கூறுவாயாக!

துன்பக்கண் ணீரில் துளைந்தேற்கு உன் ஆனந்த
இன்பக் கண் ணீர் வருவது எந்தாள் பராபரமே. 39.

துன்பக் கண்ணீரில் மூழ்கி இருந்த எனக்கு, உனது பேரின்பத்தால் இன்பக் கண்ணீர் வெளிப்படுவது எப்பொழுது?

எண்ணத் அறிந்தே இளைப்புஅறிந்தே ஏழை உய்யும்
வண்ணம் திருக் கருணை வையாய் பராபரமே. 60.

என் எண்ணத்தை அறிந்து என், மனதில் இருக்கும் சோர்வை அறிந்து, இந்த ஏழை உய்யுமாறு, நினது திருவருளைப் பதிய வைப்பாயாக!

மண்ணொடு விண் காட்டி மறைந்து மறையா அருளைக்
கண்ணொடு கண் ணாக என்று காண்பேன் பராபரமே. 82.

பலமுறையும் உன்னிடம் கெஞ்சி யாசித்தது எல்லாம், நின் திருவடியைத் தஞ்சம் அடையும்போது, "அஞ்சாதே!" என்று கூறி அருளுவதற்காக அன்றோ?

பஞ்சரித்து நின்னைப் பலகால் இருந்தது எல்லாம்
அஞ்சல் எனும்பொருட்டே அன்றோ பராபரமே. 83.

எந்த எந்த திசையை திரும்பிப் பார்த்தாலும், அந்த அந்த திசையில் காணப்படும் எல்லா உயிர்களுக்கும் உயிராய் இருப்பது நீ அல்லவா?

அன்பர்எல்லாம் இன்பம் அருந்திடவும் யான்ஒருவன்
துன்புறுதல் நன்றோநீ சொல்லாய் பராபரமே.254.

நினது அடியார்கள் எல்லாம் இன்பம் பருகிடவும், நான் ஒருவன் மட்டும் துன்புறுதல் நல்லதோ? நீயே விடை கூறுவாயாகா!

அன்றுஅந்த நால்வருக்கும் அற்புதமாய் நீ உரைத்தது
ஒன்று அந்த வார்த்தை எனக்கு உண்டோ பராபரமே.281.

அன்று அந்த சனகன் முதலிய முனிவர் நான்கு பேருக்கும், அற்புதமாக நீவிர் உரைத்த அந்த ஒரு வார்த்தை, இன்று எனக்கும் உண்டோ?

தாய்இருந்தும் பிள்ளை தளர்ந்தார்போல் எவ்இடத்தும்
நீயிருந்தும் நான் தளர்ந்து நின்றேன் பராபரமே.349.

பெற்ற தாய் உடன் இருக்கவும், பிள்ளை தளர்வடைந்தது போல எல்லா இடத்திலும் நீ நீக்கமற நிறைந்திருந்தும், நான் தளர்ந்து நிற்கிறேன்.

இவ்வாறு பட்டினத்தாரும் தாயுமானவரும் மானுடத்தை தங்களுக்கே உரிய பாதையில் அழைத்துச் செல்கின்றனர்.

அவர்கள் காட்டிய வழியில் ஆனந்தமாக பயணிப்போமாக.

ஆனந்தம்! ஆனந்தம்1 ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!!

## துணைநின்ற நூல்கள்.


1. தாயுமானவர் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம் ,விஜயா பதிப்பகம், கோவை.
2. பட்டினத்தார் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம் ,விஜயா பதிப்பகம், கோவை.
3. தாயுமானசுவாமிகள் வரலாறு, சி. இராமலிங்கம், திருப்பனந்தாள் மடம் திருப்பனந்தாள்.
4. தாயுமானவரும் வள்ளலாரும், பாரதி புத்தகலாயம், சென்னை
5. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும், அருள்நிதி மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
6. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
7. தாயுமானவர், நா. சுப்புரெட்டியார்., அய்யனார் பதிப்பகம், கூடுவாஞ்சேரி.
8. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000 அருள்நிதி மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.
9. திருமந்திரம் பாடல்கள்
10. திருஅருட்பா பாடல்கள்.